# செய்தி வெளியீடு

படைவீரர் கொடிநாள் நாடெங்கும் முப்படைவீரர்களுக்கு நன்றி பாராட்டும் வகையில் இன்று (07.12.2018) விமர்சையாக அனுசரிக்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் ரூ.25,000/-த்தினை வழங்கி கொடிநாள் நிதிவசூலினை ஆளுநர் மாளிகையில் இன்று தொடங்கி வைத்தார். தமிழகத்திலுள்ள அனைத்து படைவீரர்களுக்கும், முன்னாள் படைவீரர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தொலைக்காட்சி மற்றும் வானொலியில் உரையாற்றிய அவர் நாட்டின் இறையாண்மையை காப்பதில் படைவீரர் மற்றும் முன்னாள் படைவீரர்களின் உன்னதமான தியாகங்களை நினைவு கூர்ந்தார்.

மேலும் மக்கள் அனைவரும் கொடிநாள் நிதிக்கு நிதியினை வாரி வழங்கி முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்காக வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை மேலும் சிறப்பாக செயல்படுத்திட அரசிற்கு உதவ வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்-

இந்நிகழ்ச்சியில் ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள், அரசு முதன்மைச் செயலாளர் பொதுத்துறை டாக்டர். திரு. செந்தில்குமார், இ.ஆ.ப., அரசு சிறப்பு செயலாளர் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் திருமதி. மைதிலி க.இராஜேந்திரன், இ.ஆ.ப., மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் திரு.அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப, ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

---

ராஜ்பவன், சென்னை -22 ஒம்/-

நாள் : 07.12.2018 இணை இயக்குநர் (ம.தொ)

**PRESS RELEASE**

On the occasion of Armed Forces Flag Day, the Hon'ble Governor of Tamil Nadu, Thiru. Banwarilal Purohit inaugurated the Armed Forces Flag Day, Fund collection for the year 2018-19 by contributing Rs.25,000/-.

While addressing the State through All India Radio and Door Darshan, later in the day, he remembered the Sacrifices made by the personnel of Armed Forces in protecting the country's territorial integrity.

He called upon the people of Tamil Nadu to contribute generously to Armed Forces Flag Day Fund to supplement the Government's efforts in the welfare activities meant for Ex-Servicemen and their dependents.

The Additional Chief Secretary to Governor, Thiru. R.Rajagopal, I.A.S., the Principal Secretary to the Government Public Department Dr. P.Senthil Kumar, IAS., Special Secretary to the Government (Public) Department Tmt. Mythili K. Rajendran, Chennai District Collector Thiru A.Shanmuga Sundram, IAS., are also present during the occasion.

---

Raj Bhavan, Chennai -22 Sd/-

Date : 07.12.2018 Joint Director (PR)